




நல்லவே எண்ணல் வேண்டும்...,

எண்ணிய முடிதல் வேண்டும்...,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 126 | 31.10.2025 | FRIDAY | IPPASI : 14 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 126 | 31.10.2025 | வெள்ளிக்கிழமை | ஐப்பசி : 14 | விலை : ரூ.5/–



3 தேவர் ஜெயந்தி முன்னிட்டு பாஜக சார்பில் திரு உருவ சிலைக்கு மாலை மரியாதை

4 வலிமையான தலைவர் பிரதமர் நரேந்திர மோடி: தென்கொரியாவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பாராட்டு

2 மதுரையில் ஓபிஎஸ்ஸுடன் செங்கோட்டையன் திடீர் ஆலோசனை: ஒரே காரில் பசும்பொன் பயணம் செய்ததால் பரபரப்பு


# பசும்பொன்னில் ரூ.3 கோடியில் தேவர் பெயரில் திருமண மண்டபம்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

பசும்பொன்: அக்.31-

பசும்பொன்னில் ரூ.3 கோடியில் முத்துராமலிங்க தேவர் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் அவரின் சிலைக்கு மரியாதை செலுத்திய முதல்வர் ஸ்டாலின் செய்தியாளர்களிடம் பேசுகையில், ' இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னையே ஒப்படைத்து உழைத்த தேவரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினோம். அறம் வளர்த்த பாண்டிய மன்னர்கள் ஒருமித்த இளவல் போல கம்பீரமாக தேவர் காட்சியளிப்பதாக அண்ணா பாராட்டினார். 1963ல் தேவர் உயிரிழந்தபோது அண்ணாவும், கருணாநிதியும், எம்ஜிஆரும் இந்த பசும்பொன் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தை 1969ல் பார்வையிட்டு, 1974ல் மணிமண்டபமாக உருவாக்கி கொடுத்தவர் கருணாநிதி. பாம்பன் பாலத்தை கட்டிய நீலகண்டன் தான் இந்த மணி மண்டபத்தையும் கட்டினார். அதேபோல மூக்கையா தேவரின் முயற்சியால் அமைக்கப்பட்டு, மதுரையில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் தேவர் சிலை திறப்பு விழாவுக்கு அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரியை அழைத்துவந்து தலைமை வகித்தவரும் கருணாநிதிதான்.

மதுரை ஆண்டாள் புரம் பாலத்துக்கு தேவர் பெயரை சூட்டியதும், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் ரூ.25 லட்சம் மதிப்பிலான அறக்கட்டளையை உருவாக்கியதும் கருணாநிதிதான்.

2007ல் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவை மாபெரும் அரசு விழாவாக கொண்டாடியதும், தேவரின் நினைவிடத்தில் அணையா



விளக்கை அமைத்தது, தேவர் இல்லத்தை ரூ.10 லட்சத்தில் புதுப்பித்தது, ரூ.9 லட்சத்தில் தேவர் நூற்றாண்டு விழா வளைவு அமைத்தது போன்றவற்றை செய்தது கருணாநிதிதான்.

முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவையொட்டி பசும்பொன் கிராமத்துக்கு மட்டும் ரூ.2 கோடியே 5 லட்சத்து 45 ஆயிரம் ரூபாயில் பணிகளை செய்தது திமுக அரசுதான். 1989ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை உருவாக்கி கல்வி வேலைவாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பை உருவாக்கியவர் கருணாநிதி. மேலநீதித நல்லூரில் அமைந்த பசும்பொன் தேவர் கல்லூரிக்கு அனுமதி வழங்கியதும், அந்த கல்லூரிக்கு 44 ஏக்கர் நிலத்தை வழங்கியதும் கருணாநிதி அரசுதான். அந்த கல்லூரியை சிலர் சீர்குலைத்தபோது, எனது அரசு அதில் தலையிட்டு இப்போது சிறப்பாக இயங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேவர் ஜெயந்தி விழாவில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு மக்களை மழை வெயிலில் இருந்து பாதுகாக்க தேவர் நினைவிடத்தில் ரூ1.55 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தெய்வத் திருமகனார் அரங்கத்தை கடந்த ஆண்டு நான் திறந்துவைத்தேன். இப்போது பசும்பொன்னில் புதிதாக திருமண மண்டபம் அமைக்க வேண்டுமென ஒரு கோரிக்கை எழுந்துள்ளது. அதனை உடனடியாக ஏற்று ரூ.3 கோடியில் இங்கே தேவர் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என அறிவிக்கிறேன்'' எனத் தெரிவித்தார்.

பசும்பொன்னில் மரியாதை செலுத்தியது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், 'அடக்குமுறைச் சட்டங்களின் ஆதிக்கத்தில் இருந்து நம் மக்களை மீட்டு, நேதாஜி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் எனது மரியாதையைச் செலுத்தினேன். மேலும் மதுரை தெப்பகுளத்தில் மானம் காத்த மருதிருவர் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலை அணிவித்து வணங்கினேன்.

பசும்பொன்னில் மாபெரும் திருமண மண்டபம் கட்டப்படும் என்ற புதிய அறிவிப்பை வெளியிட்ட மனநிறைவுடன் சென்னைக்குத் திரும்புகிறேன்' எனத் தெரிவித்தார்.



## திசையன்விளை பேரூராட்சியில் சிறப்பு வார்டு சபைக் கூட்டம் : மாவட்ட திமுக மகளிர் அணி தலைவி கமலா நேரு தலைமையில் நடந்தது

திசையன்விளை. அக்.29

திசையன்விளை சிறப்பு நிலை பேரூராட்சி 6 வது வார்டில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் உடன்குடி ரோடு தெருவில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி கவுன்சிலர் மற்றும் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக மகளிரணி தலைவர் கமலா நேரு தலைமை தாங்கினார். பேரூராட்சி அலுவலர் சிவா மற்றும் முன்னாள் லயன்ஸ் கவர்னர் சுயம்புராஜன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கே. டி .பி .ராஜன், செல்லப்பா ஆசிரியர், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஜேக்கப் மனோகர், பால்ராஜ் ஆசிரியர்,ஞானப்பிரகாசம், சேவியர்,அமிர்தலிங்கம்,சாரதா பிரபாகர், வசந்த், சித்ரா, மகாலிங்கம், ரகுபதி, சர்மிளா,அலுவலக பணியாளர்கள் விஜயகுமார், கனேசன், மகேஷ் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு வார்டுக்கு தேவையான வசதிகள் குறித்து கருத்து தெரிவித்தனர். நிறைவில் முன்னாள் நகர காங்கிரஸ் தலைவர் எஸ்.ஜி. ராஜன் நன்றி கூறினார்.

## அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)

**(24 x 7)**

**88705 00000**

sakkraviyugam2025@gmail.com

### கிடப்பில் போடப்பட்ட அறநிலையத்துறை பதவி உயர்வு! : யார் காரணம்?

# அமைச்சரா? ஆணையரா?

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர்கள், உதவி ஆணையர்கள், துணை ஆணையர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்காமல் உள்ளதாக, பலரும் குழம்பி வரும் நிலையில், இது சம்பந்தமாக விசாரித்த போது, கடந்த இரண்டு ஆண்டுகளாக பதவி உயர்வு என்பது அறநிலையத்துறையில் கேள்விக்குறியாக அமைந்துள்ளது, பல செயல் அலுவலர்கள் உதவி ஆணையர்கள் தங்களுக்கு பதவி உயர்வு வரும் என்று 6 மாதத்திற்கு ஒருமுறை காத்திருந்து இதுவரை வீணாகவே போய் உள்ளது,

செயல் அலுவலர்களுக்கு 2024 இல் பதவி உயர்வு வழங்கியதோடு, இதுவரை செயல் அலுவலர்களுக்கு பதவி உயர்வு என்பது எட்டாக்கனியாகவே உள்ளது, சமீபத்தில் இரண்டு நபர்களுக்கு மட்டுமே உதவி ஆணையராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது, அதேபோல் துணை ஆணையர்களும் 2024 இல் பதவி உயர்வு அளிக்கப்பட்டதோடு உள்ளது, சமீபத்தில் ஆறு துணை ஆணையர்களுக்கு மட்டுமே இணை ஆணையராக பதவி



உயர்வு வழங்கப்பட்டுள்ளது,

இது சம்பந்தமாக அறநிலையத்துறை அதிகாரிகள் மட்டத்தில் விசாரித்த போது, அறநிலையத்துறை ஆணையராக குமரகுருபரன் இருந்த பொழுது, அவ்வப்போது தயாரிக்கப்படும் பதவி உயர்வு பட்டியல் அடிக்கடி வந்து கொண்டிருக்கும் அதன் பிறகு (பேனல் லிஸ்ட்) பதவி உயர்வு என்பது உரிய நேரத்தில் சரியாக வழங்கப்படுவதில்லை.

செயல் அலுவலர்கள் 2024 இல் இருந்து இதுவரை பதவி உயர்வு கிடைக்கும் என்ற ஆவலில், 6 மாதம் காத்துக் கொண்டுள்ளனர். ஆனால் 6 மாதத்திற்கு ஒருமுறை (பேனல் லிஸ்ட்) பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்படுகிறதே தவிர அதற்கு உண்டான பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை.

2022ல் எடுக்கப்பட்ட பதவி



ஆணையர் பி.என்.ஸ்ரீதர்

உயர்வு பட்டியல் படி 12 முதல் நிலை செயல் அலுவலர்களுக்கு உதவி ஆணையராக பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு இதுவரை பதவி உயர்வு வழங்கப்படவில்லை. தற்போது துணை ஆணையராக பணியாற்ற வேண்டிய பலர் பதவி உயர்வு வழங்கப்படாததால், இன்னும் முதல் நிலை செயல் அலுவலர்களாகவே பணியாற்றி வருகிறார்கள். பணி மாறுதல்கள் மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகிறது தவிர, பதவி உயர்வு என்பது வழங்கப்படவில்லை என்று புலம்புகின்றனர்.

இந்தக் குளறுபடிகளுக்கு காரணம் என்ன என்று விசாரித்த போது, 6 மாதத்திற்கு ஒருமுறை ஆணையர் அலுவலகத்தில் பதவி உயர்வு பட்டியல் தயார் செய்கிறார்களே தவிர, இந்த பட்டியலை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் பட்டியல் எடுக்கப்பட்டதோடு, கிடப்பில் போட்டு வருகிறார்கள், ஒவ்வொரு முறையும் தயாரிக்கப்படும் பதவி உயர்வு பட்டியல் படி, பதவி உயர்வு வழங்கி வந்திருந்தால் இந்த குளறுபடி அறவே இருக்காது என்கின்றனர் அறநிலையத்துறையினர்.

அவ்வப்போது உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்கிக் கொண்டு வந்திருந்தால், ஒவ்வொரு அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் கிடைக்க வேண்டிய பலன்கள் வந்தடைந்திருக்கும். இதன் பிறகாவது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர் அவ்வப்போது தயாரிக்கப்படும் பதவி ஏற்பு பட்டியலை அமைச்சர் சேகர்பாபுவின் கவனத்திற்கு கொண்டு செல்வாரா ? என்பது போகப் போகத்தான் தெரிய வரும்.

## திருப்பூரில் இருந்து ஊர்வலமாக சென்று மருதுபாண்டியர்கள் ஜெயந்தி விழா முக்குலத்தோர் ஜெயந்திவிழா வழிபாடு

திருப்பூர், அக்.31-

தேசிய முக்குலத்தோர் கழகம் மற்றும் தேவர் மக்கள் நல அறக்கட்டளையின் சார்பாக மருதுபாண்டியர்கள் ஜெயந்தி விழா, பசும்பொன் தேவர் ஜெயந்தி விழா என முன்னோர்கள் குரு பூஜை விழாவினை கொண்டாடும் விதத்தில், திருப்பூரில் இருந்து ஊர்வலமாக காளையார் கோவில் சென்று மருது பாண்டியர் குருபூஜையில் பங்கேற்று, பின்பு பசும்பொன்னில் அருள் பாலிக்கும் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருமகனார் திருக்கோவிலில் 200க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளுடன் பங்கேற்று வழிபாடு செய்தனர். சுற்றுப்பயணத்திற்கு நிறுவனதலைவர் சமுதாய




போராளி டெல்டா சுரேஷ் தென்னம்பிரியர் தலைமை தாங்கினார். உடன் மாநில பொருளாளர் ராஜி சுரேஷ், மாநிலச் செயலாளர் தனசேகர், மாநில ஒருங்கிணைப்பாளர் சின்னச்சாமி, மாநில மகளிர் அணி தலைவி வித்யா பாரதி சின்னச்சாமி மகளிர் அணி பொருளாளர் கோவிந்தம்மாள், மாநில இளைஞரணி செயலாளர் அழகுராஜா, மாநில தொழிற்சங்க செயலாளர் ரவி, மாநில தொழிற்சங்க தலைவர் வினோத், மாநில இளைஞரணி பொதுச் செயலாளர் ஜனா, ஐடி விங் சூர்யா உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள் 200க்கும் மேற்பட்டோர் திருப்பூரில் இருந்து ஊர்வலமாக சென்று வழிபாடு செய்து வந்தனர்.

# அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தமிழக தேர்தல் அதிகாரி ஆலோசனை: வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு அதிமுக, பாஜக ஆதரவு; திமுக, காங்கிரஸ் எதிர்ப்பு

சென்னை, அக்.31-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் ஆலோசனை நடத்தினார். திருத்தப் பணிகளுக்கு அதிமுக, பாஜக ஆதரவு தெரிவித்த நிலையில், திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட 10 கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்தியாவில் கடந்த 1951 முதல் 2004 வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி 8 முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடைசியாக கடந்த 200204 காலகட்டத்தில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. சுமார் 21 ஆண்டுகளுக்கு பிறகு, பிஹார் மாநிலத்தில் சமீபத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நடத்தப்பட்டது.

இந்த நிலையில், 2026 தொடக்கத்தில் தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கத்திலும் 2027ம் ஆண்டில் உத்தர பிரதேசம், குஜராத், கோவாவிலும், 2028ம் ஆண்டில் சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், அந்தமான் நிகோபர், லட்சத்தீவிலும் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி, மேற்கண்ட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கான அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 27ம் தேதி வெளியிட்டது. 28ம் தேதி இப்பணி தொடங்கியது. இதன் முதல்கட்டமாக, அக்.28 முதல் நவ.9ம் தேதி வரை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. நவ.4 முதல் டிச.4 வரை அலுவலர்கள் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொள்கின்றனர். டிச.9ல் வரைவுப் பட்டியல் வெளியிடப்படுகிறது. டிச.9 முதல் 2026 ஜன.8 வரை திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. டிச.9 முதல் ஜன.31 வரை பட்டியலில் பெயர் நீக்கம் தொடர்பான நோட்டீஸ் வழங்கப்பட்டு விசாரணை நடத்தப்படும். இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.7ம் தேதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில், அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.




இதில், திமுக சார்பில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டப்பிரிவு செயலாளர் என்.ஆர்.இளங்கோ, அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், ஐ.எஸ்.இன்பதுரை எம்.பி., பாஜக சார்பில் மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், காங்கிரஸ் சார்பில் முன்னாள் தலைவர் கே.வீ.தங்கபாலு, மாநில பொதுச் செயலாளர் டி.செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் மாநில செயற்குழு உறுப்பினர்கள் பெரியசாமி, வகிதா நிஜாம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் மாநில குழு உறுப்பினர்கள் ஆறுமுகநயினார், சாமுவேல்ராஜ் மற்றும் தேமுதிக, விசிக, நாம் தமிழர், ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ், தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அப்போது, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் விளக்கினார். வீடு வீடாக ஆய்வு செய்து படிவம் வழங்குதல், அவற்றை பூர்த்தி செய்து மீண்டும் பெறுதல், இதற்கான அவகாசம், பட்டியலில் பெயர் இல்லாதவர்களுக்கான நடைமுறை, பெயர் நீக்கப்படும் போது நோட்டீஸ் வழங்குதல் போன்ற பல்வேறு நடைமுறைகள் குறித்து விளக்கினார்.

இதைத் தொடர்ந்து, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர். இதில், அதிமுக, பாஜக ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை ஆதரித்து கருத்து தெரிவித்தனர். சிறப்பு திருத்த பணிகளுக்கு கூடுதல் அவகாசம் அளிக்க வேண்டும் என்று அதிமுக சார்பில் வலியுறு த்தப்பட்டது. திமுக, காங்கிரஸ், தேமுதிக உள்ளிட்ட மற்ற 10 கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்தன. ‘பருவமழை, பண்டிகை காலத்துக்கு நடுவில் இந்த பணி மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். பிஹாரில் நடத்திய தவறை தமிழகத்தில் செய்யக்கூடாது. நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை இந்த திட்டத்தை செயல்படுத்தக்கூடாது’ என்று தெரிவித்துள்ளனர். இது கடைசி தேர்தலாக

இருக்கும் என அஞ்சுவதாக கம்யூ னிஸ்ட் கட்சிகளும், தமிழகத்துக்குள் வாக்காள ர்களாக வட மாநிலத்தவரை திணிக்கும் நடவடிக்கை என்று நாம் தமிழர் கட்சியும் கருத்து தெரிவித்துள்ளன.

இந்நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அரசியல் கட்சிகள் சார்பில் அளிக் கப்பட்ட பரிந்துரைகளை அர்ச்சனா பட்நாயக் பெற்றுக் கொண்டார்.

இதேபோல, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தலைமையிலும், சென்னையில் மாநகராட்சி ஆணையர் தலைமையிலும் அங்கீக ரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அங்கு உள்ளூர் நிலவரங்கள் அடிப்படையில் பல்வேறு கோரிக்கைகள், பரிந்துரைகளை மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் அரசியல் கட்சியினர் வழங்கியுள்ளனர்.

77 ஆயிரம் பேருக்கு பயிற்சி: வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முதல் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகள் என 77 ஆயிரம் பேருக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் இந்த பயிற்சிகள் அளிக்கப்படும் என்று அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

# டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை: இபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, அக்.31-

டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த போர்க்கால நடவடி க்கை எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் தற்போது வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. பருவமழையினால் அனைத்துப் பகுதிகளிலும் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தி பெருகியுள்ளது.



திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் இல்லாத அளவு, இந்த ஆண்டு இதுவரை சுமார் 16,500க்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்; சுமார் 9 பேர் மரணமடைந்துள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. குறிப்பாக சென்னை, திருவள்ளூர் மற்றும் கோவை மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலால் அதிக அளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திமுக அரசே இந்த மாவட்டங்களில் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால், டெங்குவை கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மக்களைக் காக்க உடனடியாக கீழ்க்கண்ட பணிகளை போர்க் கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன்.

உள்ளாட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு, சாலைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழை நீர் தேங்காமல் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் கடைகள், வீடுகள் மற்றும் சாலை ஓரங்களில் உள்ள பழைய டயர்கள், தேங்காய் ஓடுகள், உடைந்த பழைய பிளாஸ்டிக் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றில் தேங்கி இருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்தும் நடவடிக்கை எடுப்பதுடன், உள்ளாட்சிப் பணியாளர்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உள்ளாட்சிப் பணியாளர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில், குடிநீர் தொட்டிகளில் குளோரின் மருந்து தெளித்தல்; சாக்கடைகளில் கொசு மருந்து அடிப்பது போன்ற முறையான பணிகளை மேற்கொள்ள வேண்டும். உள்ளாட்சிப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று காய்ச்சல் இருக்கிறதா என்பதை விசாரித்து, காய்ச்சல் இருப்பதைக் கண்டுபிடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். தமிழகம் முழுவதும் கூடுதல் மருத்துவ முகாம்களை நடத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும்.

டெங்கு மற்றும் மலேரியா போன்ற காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசு மருத்துவமனைகளுக்கு படையெடுக்கிறார்கள். அதிக நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கு வருவதால், தேவையான மருந்து, மாத்திரைகளை மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பற்றாக்குறை இல்லாமல் வழங்க வேண்டும்.

சிகிச்சைக்காக அரசு மேலும், பெரும்பான்மையான அரசு மருத்துவமனைகளில் கழிவுநீர் தேங்கி நிற்பதாகவும், சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும், மருத்துவமனைகளுக்கு வரும் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தெரிவிக்கின்றனர். அரசு மருத்துவமனையை நம்பி வரும் ஏழை, எளிய மக்களின் நலன் கருதி, மருத்துவமனைகளின் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

எப்போதுமே ‘தும்பை விட்டு வாலை பிடிக்கும் கதையாக மக்கள் பாதிக்கப்பட்டபின் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சால்ஜாப்பு கூறாமல், இனியாவது முன்னெச்சரிக்கையோடு செயல்பட வேண்டுமென்று திமுக ஸ்டாலின் மாடல் அரசை வலியுறுத்துகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கல்லணை கலைவாணர் நகரில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி முன்னிட்டு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சேதுசீனிவாசன், தலைமையில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர். இதில் தேவர் பேரவை நிர்வாகிகள் உள்ளனர்.

# மதுரையில் ஓபிஎஸ்ஸுடன் செங்கோட்டையன் திடீர் ஆலோசனை: ஒரே காரில் பசும்பொன் பயணம் செய்ததால் பரபரப்பு

மதுரை, அக்.31-

அதிமுகவில் அதிருப்தியுடன் பயணம் செய்துவந்த முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், மதுரையில் திடீரென்று ஓ.பன்னீர்செல்வத்தை சந்தித்து ஆலோசனை நடத்தியதோடு, இருவரும் ஒரே காரில் பசும்பொன் புறப்பட்டு சென்றனர். இருவரும் அதிமுகவில் பழனிசாமிக்கு எதிரானவர்களை ஒன்றினைக்க நடக்கும் முயற்சியாக பார்க்கப்படுவதால் தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அதிமுகவில் எம்ஜிஆர் முதல் ஜெயலலிதா காலம் வரை, செல்வாக்கு மிக்க நபராக இருந்தவர் செங்கோட்டையன். ஜெயலலிதா இவரை அவ்வப்போது ஒதுக்கி வைப் பதும், மீண்டும் கட்சியில் முக்கிய பொறுப்புகள் கொடுத்தும் முக்கியத்துவம் வழங்குவதுமாக இருந்து வந்தார். ஆனாலும், மற்றவர்களை போல் ஜெயலலிதா மீது அதிருப்தியடைந்து மாற்றுக்கட்சிக்கு செல்லாமல் அதிமுகவிலே நீடித்து வந்தார்.

ஜெயலலிதா முறைவுக்கு பிறகு, சசிகலா கே.பழனிசாமியை முதல்வராக்கிய போது கட்சியில் ஓரங்கட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்த செங்கோட்டையனை அழைத்து மீண்டும் அமைச்சர் பதவி வழங்கி முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால், சசிகலா, டிடிவி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் அடுத்தடுத்து அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் அவர்களுடன் செங்கோட்டையன் செல்லாமல் கே.பழனிசாமியுடன் உறுதியாக நின்றார்.

இந்நிலையில் செங்கோட்டையன், கே.பழனிசாமியுடன் முரண்பட்டு நிற்கவே, அதிமுகவில் பிரிந்து சென்றவர்களை கட்சியில் மீண்டும் சேர்க்க வேண்டும் என்று கெடு விதித்தார். அதிருப்தியடைந்த கே.பழனிசாமி, உடனடியாக செங்கோட்டையன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் வசமிருந்த கட்சிப் பொறுப்புகளை பறித்தார். ஆனால், கே.பழனிசாமிக்கு எதிராக உடனடியாக சீறுவார் என எதிர்பார்த்த நிலையில் செங்கோட்டையன் அமைதியாகவே இருந்து வந்தார்.

இந்தச் சூழ்நிலையில் நேற்று பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக மதுரை வந்த முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தனியார் ஹோட்டலில் தங்கியிருந்த ஓ.பன்னீர்செல்வத்தை சந்தித்து ‘திடீர்’ ஆலோசனை செய்தார். அதன்பின் இருவரும் ஒரே காரில் மதுரையில் இருந்து பசும்பொன்னுக்கு புறப்பட்டுச் சென்றனர்.



அதிமுகவுக்கு எதிரான கட்சி செயல்பாடுகளில் ஈடுபட்டதாக நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வத்துடன் ஒரே காரில் செங்கோட்டையன் புறப்பட்டுச் சென்றது, அதிமுக மட்டுமில்லாது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. அதனால், கே.பழனிசாமிக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம், டிடிவி.தினகரனுடன் சசிகலா தலைமையில் ஒன்றினைவதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம், தவெக நிர்வாகி சிடி.நிர்மல் குமார், சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணியில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பிருந்த நிலைபாட்டிலே தவெக இருப்பதாக கூறியதால், அவர்கள் அதிமுகபாஜக கூட்டணிக்கு செல்லவாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. அதனால், வரும் தேர்தலில் ஆட்சியைப்பிடிக்க திமுகவுக்கு எதிராக அதிமுகவை பலமாக்க வேண்டும் என்ற குரல்கள் அக்கட்சியின் கீழ் மட்டத்தில் இருந்து மட்டுமில்லாது அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மத்தியிலும் கலக குரல்கள் கேட்க தொடங்கியிருக்கின்றன.

ஓ.பன்னீர்செல்வம், அதிமுகவின் உரிமை சார்ந்த விவகாரங்களில் வழக்குப் போட்டுள்ளார். அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன், அதிமுக இருக்கும் பாஜக கூட்டணியில் இருக்கப் போவதில்லை என்று அக்கட்சியில் இருந்து சமீபத்தில் விலகியது. கே.பழனிசாமியை வீழ்த்துவதே முதல் நோக்கமாக கொண்டு அவர் செயல்படுகிறார். அவருடன் ஓ.பன்னீர்செல்வமும், செங்கோட்டையனும் சேர்ந்து இருப்பதால் எதிர்கால அரசியல் மாற்றத்திற்கு ஒரு அடித்தளமாக இருக்கப்போகிறது என்றும், அதிமுகவுக்கு இந்த மூவரால் வரும் தேர்தலில் சிக்கல் ஏற்படலாம் எனவும் கூறப்படுகிறது.

ஆனால், கே.பழனிசாமியை பொறுத்தவரையில் ஓபன்னீர்செல்வத்தை கட்சியில் சேர்க்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார். ஆனால், கட்சியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட ஆதங்கமும், அதிருப்தியையும் செங்கோட்யனை ஏதோ ஒரு வகையில் முடிவெடுக்க வைத்துள்ளதாலே அவர் இணைந்துள்ளதால் இன்றே அவர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்குவதற்கான ஆலோசனையில் கட்சி நிர்வாகிகளுடன் கே.பழனிசாமி ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக, இன்னும் சில மணி நேரங்களில் மதுரையில் கே.பழனிசாமி செய்தியாளர்களை சந்திக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.



■ பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் ஜெயந்தியின் 118வது விழாவையொட்டி வெள்ளாளர் முன்னேற்ற சங்கம் மற்றும் கழகம் சார்பில் நிறுவனத் தலைவர் ஆர்.வி.ஹரிஹரூன் பிள்ளை தலைமையில் மரியாதை செலுத்திய போது எடுத்த படம்.அருகில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மாநில செயலாளர் வெங்கடேஷன்,வெள்ளாளர் முன்னேற்றக் கழக திருச்சி மாவட்ட செயலாளர் அழகு முருகன் | கிழக்கு தொகுதி பொறுப்பாளர் ராமச்சந்திரன்,இளைஞரணி மாவட்ட செயலாளர் மனோஜ் குமார்,மாவட்ட துணை அமைப்பாளர் ராமராஜ் ,கிழக்கு தொகுதி இளைஞரணி பொறுப்பாளர் குணா, மேற்கு தொகுதி இளைஞரணி பொறுப்பாளர் கருனேஷ், மலைக்கோட்டை பகுதி முத்துக்குமார், ரவி, மகுடேஸ்வரன், உறையூர் முத்துக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

# பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 63-வது குருபூஜை மற்றும் 118வது ஜெயந்தி விழா

## தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் வழக்குரைஞர் எம் சரவணன் தலைமையில் மரியாதை

திருச்சி, அக்.31-


பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 63வது குருபூஜை மற்றும் 118வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில பொதுச் செயலாளர் வழக்குரைஞர் எம் சரவணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் மாநில பேச்சாளர் சிவாஜி சண்முகம் வெள்ளை மண்டி பாலசுப்ரமணியன் மலைக் கோட்டை சொக்கலிங்கம் அண்ணா சிலை விக்டர் வழக்குரைஞர் சுகன்யா மார்க்கெட் கோட்டத் தலைவர் மார்க்கெட் சம்சுதீன் மார்க்கெட் மாரியப்பன் திருச்சி மகாராஜா இபி ரோடு சண்முகம் மார்க்கெட் பழனி நிர்மல் குமார் மேல புதூர் சத்யநாதன் திருக்கண்ணன் சாலமன் மலைக்கோட்டை வெங்கி விஷ்ணு மேலபுதூர் கருப்புசாமி மணிகண்டன் கவி பேக்ஸ் கார்த்தி உறையூர் விஜி தாகூர் தெரு முருகன் தியாகராஜன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.




■ திருப்பூர் தெற்கு மாவட்ட கழக வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் இல. பத்மநாபன் அவர்கள் தலைமையில் சின்ன வீரன்பட்டி அலுவலகத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் மகாலிங்கம் அவர்கள் செயற்குழு உறுப்பினர் எம் ஆர் பாபு அவர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர் தாராபுரம் தனசேகர் அவர்கள் உடுமலை நகர மன்ற தலைவர் மத்தீன் மற்றும் கழக அணியின் அமைப்பாளர்கள் மாவட்ட ஒன்றிய கழக அணியின் துணை அமைப்பாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்



■ தமிழக ரியல் எஸ்டேட் அசோசியேசன் சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118 வது ஜெயந்தியை முன்னிட்டு திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தபோது எடுத்த படம். அருகில்மாநில தலைவர் எம் கே கமலக்கண்ணன், மாநில செயலாளர் ஆர். ஸ்டாலின், மாநில பொருளாளர் மலேசியா மணி, மாநில அவைத்தலைவர் எஸ். அமிர்தன், மாநில மகளிர் அணி செயலாளர் பேபி,வடக்கு மாவட்ட தலைவர் நாகவேல், திருச்சி மாவட்ட செயலாளர் வசந்தகுமார், துணைச்செயலாளர் செந்தில் குமார், மலைக்கோட்டை பகுதி செயலாளர் அருணகிரி, துணைச் செயலாளர் காந்த்கிங்,மாநில துணைத்தலைவர் சத்தியநாராயணன், பக்கிரி சாமி மாநில கௌரவ தலைவர் காட்டூர் ராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



## திருச்சி மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் 118வது தேவர் ஜெயந்தி விழா: மாவட்ட செயலாளர் ஜெ.சீனிவாசன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை

திருச்சி, அக்.31-

பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118வது ஜெயந்தி விழாவையொட்டி திருச்சி மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் மாவட்ட செயலாளர் ஜெ.சீனிவாசன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஜெயலலிதா பேரவை மாநில துணைச் செயலாளர்கள் கவுன்சிலர் அரவிந்தன், ஜோதிவாணன்,மாவட்டத் துணைச் செயலாளர்கள் வனிதா, பத்மநாதன்,திருச்சி மாநகராட்சி அதிமுக தலைவர் கோ.கு. அம்பிகாபதி,இளைஞர் அணி ஜனிகாந்த்,இலக்கிய அணி பாலாஜி,ஐ.டி பிரிவு வெங்கட் பிரபு,பகுதிச் செயலாளர்கள் நாகநாதர் பாண்டி, புத்தூர் ராஜேந்திரன்,வாசுதேவன், ரோஜர் கலீல் ரகுமான், ஏர்போர்ட் விஜி, நிர்வாகிகள் சில்வர் சதீஷ்குமார், பொன்னர்,கருமண்டபம் சுரேந்தர், ஏ.ஜி.பழனி மாணிக்கம், மகளிர் அணி டாக்டர் தமிழரசி சுப்பையா, வக்கீல்கள் முல்லை சுரேஷ் , முத்துமாரி, சசிகுமார், ஜெயராமன், எட்வின் ஜெயக்குமார், கௌசல்யா, ஜெய ஸ்ரீ,நிர்வாகிகள் ஒத்தக்கடை மகேந்திரன், மணிகண்டன், அக்பர் அலி, கீழக்கரை முஸ்தபா, வசந்தம் செல்வமணி எடமலைப்பட்டி புதூர் வசந்தகுமார், ரமணி லால், கொட்டப்பட்டு செந்தில் குமார், அப்பாகுட்டி, உடையான்பட்டி செல்வம், சாத்தனூர் செல்வராஜ், புவனேஸ்வரி, ஆரோக்கியமேரி, சபீனாபேகம், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## சீமானை ‘செந்தமிழர் சீமான்’ என பசும்பொன் சந்திப்பில் முழக்கமிட்ட வைகோ!

மதுரை: அக்.31-

அரசியலில் எதிரும், புதிருமாக இருந்து வந்த வைகோ, சீமான் பசும்பொன்னில் ஒன்றாக சந்தித்துக் கொண்டதோடு, சீமானை ‘செந்தமிழர் சீமான்’ என முழக்கமிட்டதோடு அவரை ஆரத்தழுவி கட்டி அனைத்துக் கொண்டது, நாதகவினர் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




தமிழக அரசியலில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் தங்கள் அரசியல் நிலைப்பாடுகளில் எதிரெதிர் துருவமாக செயல்பட்டு வந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பு சம்பந்தமான விவகாரத்தில் ஒருவர் மீது ஒருவர் மிகக் கடும் விமர்சனங்களை செய்துவந்த நிலையில் இன்று இருவரும் ஒரே நேரத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்திற்கு வந்தனர். இருவரும் ஒரே நேரத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

அப்போது வைகோ கூறுகையில், “செந்தமிழர் சீமானும், நானும் ஒரே வேளையில் பசும்பொன் வந்தது எல்லையில்லா மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது முயற்சிகளும் வெற்றி மேல் வெற்றி பெறட்டும். நான் மருத்துவமனையில் இருந்தபோது என்னை வந்து பார்த்தார். அவருக்கு உடல்நிலை சரியில்லாவிட்டால் நான் கவலையுடன் பேசுவேன்.” என்றார்.

அதற்கு உடனே சீமான், ”நானும், எண் அண்ணனும், அவரது அம்மா இறந்தபோது ஒன்றாக நின்று பேட்டிக் கொடுத்தோம்” என்று சிலாகித்தார். அதற்கு வைகோ, ”என் தாய் இறப்பிற்கு கலிங்கப்பட்டிக்கு ராத்திரியோடு ராத்திரியாக சீமான் வந்துட்டாரு, சீமானின் அரசியல் பயணம் தொடரட்டும்” என்றார்.


பசும்பொன்னில் வைகோ, சீமானை ‘செந்தமிழர் சீமான்’ என்று முழக்கமிட்டதோடு, இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி கட்டி அனைத்துக் கொண்ட சம்பவம் நாம் தமிழர் கட்சியினர் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## தேவர் ஜெயந்தி முன்னிட்டு பாஜக சார்பில் திரு உருவ சிலைக்கு மாலை மரியாதை

தேனி, ஆக்.31-

தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானாவில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் ஜெயந்தியை முன்னிட்டு திரு உருவ சிலைக்கு பாஜக சார்பில் மாலை அணிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் பாஜக நகர தலைவர் சிங்கம் தலைமையில், கம்பம் சட்டமன்ற பொதுச்செயலாளர் இராமநாதன் முன்னிலையில், நகரச் செயலாளர் பிரபு, சசி, வக்கீல் மாரிச் செல்வம் மற்றும் கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.




## பசும்பொன் தேவர் ஐயா அவர்களின் 118 வது ஜெயந்தி விழா

போடி, ஆக்.31-

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 118 வது ஜெயந்தி விழா 63வது குருபூஜை விழா போடியில் நடைபெற்றது இந்த விழாவிற்கு ( INTUC ) தேனி மாவட்ட தொழிற்சங்க காங்கிரஸ் கட்சியின் சார்பாக தேனி மாவட்ட தலைவர் ஜம்பு சுதாகர் தலைமையில் போடி தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் தேனி மாவட்ட செயலாளர் எஸ் எஸ் பிரபு. தேனி மாவட்ட செயலாளர் ஹாஜிஷி.சையது இப்ராஹிம். வட்டார செயலாளர் ராமநாதன். ரஞ்சித் மருது. மணி கலந்து கொண்டு தலைவருக்கு மரியாதை செலுத்தினர். ஜம்பு சுதாகர் அவர்களுக்கு தேவர் சமுதாயம் சார்பாக துண்டு அணிவித்து மரியாதை செலுத்தினர்..



■ திருச்சி மாவட்ட மதிமுக சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118வது ஜெயந்தியை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாநில துணைப் பொதுச் செயலாளர் டாக்டர் ரொகையா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். அருகில் மாவட்ட செயலாளர்கள் வெல்லமண்டி சோமு, மணவை தமிழ்மாணிக்கம், டி.டி.சி சேரன்,மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் சந்திரா ஜெகநாதன், பகுதி செயலாளர்கள் ஜங்சன்,செல்லத்துரை,ஆசிரியர் முருகன்,வினோத்,மனோகரன்,சி ஆர்.ராமமூர்த்தி கரிகாலன்,ஜெயசீலன் உள்பட பலர் உள்ளனர்.



## 118வது தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு தேமுதிக சார்பில் மாலை அணிவித்தனர்

தேனி ஆக்.31-

தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானாவில் 118 வது முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு தேமுதிக சார்பில் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.இந்த நிகழ்வில் சின்னமனூர் நகரக் கழக செயலாளர் எம் ஆர் எஸ் முருகன்,தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளர் திரு எம் எ செல்லத்துரை தலைமையிலும் தேனி தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் பி காசிமாயன் மற்றும் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.



■ பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118 வது ஜெயந்தி விழா மற்றும் குருபூஜை விழாவை முன்னிட்டு அவரது திருஉருவச்சிலைக்கு மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன் ஆகியோர் தலைமையில் திருச்சி மத்திய மாவட்ட திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய காட்சி. அருகில் முன்னாள் எம்.எல்.ஏ பெரியசாமி, பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ், நாகராஜ், இளங்கோ,ராம்குமார், மண்டலக்குழு தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, கவுன்சிலர் கலைச்செல்வி,மஞ்சுளா பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



## தாதகவுண்டன்பட்டி கிராமத்தில் காமாட்சி அம்மன் கோவில் மண்டல பூஜை விழா

அலங்காநல்லூர், அக்.31-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே தாதகவு ண்டன்பட்டி கிராமத்தில் ஸ்ரீ காமாட்சியம்மன், கோடாங்கி அம்மன், கருப்புசாமி, கன்னிமார்கள் மற்றும் 21 பரிவார தெய்வங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம் கடந்த மாதம் நடந்தது. அதை தொடர்ந்து இன்று 48ம் நாள் மண்டல பூஜை விழா நடந்தது. இதில் யாக சாலையில் இருந்து வேத மந்திரங்கள் முழங்க யாக சாலை பூஜைகள் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பூஜை பொருட்களும் அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை தாதகவுண் டன்பட்டி, கோவிலூர், வைகாசிபட்டி, பாலமேடு, லிங்கவாடி உள்ளிட்ட ஐந்து ஊர் பங்காளிகள் மற்றும் அனைத்து கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

## முத்துராமலிங்கம் ஜெயந்தி விழாவை முன்னிட்டு திமுக சார்பில் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்தனர்

தேனி, ஆக்.31-

தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண் டானாவில் அமை ந்துள்ள முத்துராமலிங்க தேவர் ஜெயந்தியை முன்னிட்டு திரு உருவ சிலைக்கு பாஜக சார்பில் மாலை அணிவித்தனர். இந்த நிகழ்ச் சியில் திமுக நகர மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு துணைத் தலைவர் முத்துக்குமார், அவைத்தலைவர் மனோகரன், மாவட்ட துணைச் செயலாளர் செந்தில், மாவட்ட தொழில் துணை அமைப்பாளர் எம் வீரமணி, 3 வது வார்டு செயலாளர் மோகன் மற்றும் கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.






## தேவர் ஜெயந்தியை முன்னிட்டு பாஜக சார்பில் திரு உருவ சிலைக்கு மாலை மரியாதை

தேனி, ஆக்.31-

தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானாவில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, திரு உருவ சிலைக்கு பாஜக சார்பில் மாலை அணிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் பாஜக நகர தலைவர் சிங்கம் தலைமையில், கம்பம் சட்டமன்ற பொதுச்செயலாளர் இராமநாதன் முன்னிலையில், நகரச் செயலாளர் பிரபு,சசி மற்றும் கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



## ஆந்திராவை புரட்டிப் போட்ட மோந்தா புயல்: ஹெலிகாப்டரில் ஆய்வு செய்த முதல்வர் சந்திரபாபு நாயுடு

அமராவதி, அக்.31-

மோந்தா புயல் ஆந்திராவை புரட்டி போட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஹெலிகாப்டரில் சென்று ஆய்வு செய்தார். வங்க கடலில் மையம் கொண்டிருந்த மோந்தா புயல் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு காக்கிநாடா மசூலிப்பட்டினம் இடையே கரையை கடந்தது.

அப்போது சுமார் 100 முதல் 110 கி.மீ வேகத்தில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கோனசீமா, விசாகப்பட்டினம், விஜயநகரம், அம்பேத்கார், ஸ்ரீகாகுளம், பிரகாசம், கிருஷ்ணா, நெல்லூர், கோதாவரி மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பல வீடுகள் நாசமடைந்தன. மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. பல கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல கிராமங்கள், நகரங்கள் இருளில் மூழ்கின. கோனசீமா மாவட்டத்தில் மரம் விழுந்ததில் 2 பெண்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. பல ஆயிரம் ஏக்கர் நெல், பருத்தி, மிளகாய், வாழை, பப்பாளி, தென்னை மரங்கள் அழிந்தன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர் சேதத்தை விட அதிகமாக பொருட் சேதத்தை இந்த மோந்தா புயல் ஏற்படுத்தி விட்டது. ஆந்திராவில் மோந்தா புயலால் 249 மண்டலங்கள், 48 நகராட்சிகள், 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டதாக ஆந்திர அரசு, மத்திய அரசிடம் தெரியப்படுத்தி உள்ளது. இந்நிலையில் நேற்று, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அமராவதியில் காணொலி மூலம் புயல் பாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசும்போது, ''புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.எல்.ஏக்கள், எம்பிக்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். எங்கள் அரசு உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து தரும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு வருமாறு எடுத்துரைக்க வேண்டும்.

ரூ.1000 நிதியுதவி: வீடு, வாசல் இழந்த மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும். அரசு தரப்பில் அவர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டும். முகாம்களில் தங்கி உள்ள ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1,000 வீதம் நிதி உதவி வழங்கி, அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதிகபட்சமாக குடும்பத்துக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் வழங்குங்கள். புயல் வருவதை நாம் தடுக்க முடியாது. ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் நாம் அதன் பாதிப்பை குறைத்து கொள்ள முடியும். தற்போது மோந்தா புயலால் 2 பெண்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், பொருட் சேதம் மிக அதிகமாக உள்ளது.

கடைநிலை ஊழியர் முதற்கொண்டு முதல்வர் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டதன் விளைவாக மோந்தா புயலை சிறப்பாக எதிர்கொண்டோம்'' என்றார். அதன் பின்னர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, பாபட்லா, பல்நாடு, கிருஷ்ணா, ஏலூரு, டாக்டர் பிஆர் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார்.

## வால்பாறைக்கு செல்ல நவ.1 முதல் இபாஸ் கட்டாயம்: மாவட்ட ஆட்சியர் தகவல்

கோவை, அக்.31-

கோவை மாவட்டம் வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனத்துக்கு நவம்பர் 1ம் தேதி முதல் இபாஸ் கட்டாயம் என மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



நீலகிரி மாவட்டத்தின் ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள் உலகளவில் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களாக உள்ளன. மேற்கண்ட சுற்றுலாத் தலங்களுக்கு தினமும் பல ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக, வார நாட்களை விட, வார இறுதி நாட்களில் வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகளவில் இருக்கும். அதேபோல், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலும் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக உள்ளது.

இங்கு தினமும் பல ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கி ன்றனர். இந்நிலையில், மேற்கண்ட சுற்றுலாத் தலங்களின் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கவும், போக்குவரத்து நெரிசல், விபத்துகளை தவிர்க்கவும் வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து சொந்த வாகனங்கள், சுற்றுலா வாகனங்களில் வருபவர்கள் இபாஸ் எடுத்து வர வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தற்போது வரை அந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இபாஸ் எடுத்து சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

அதேபோல், இபாஸ் நடைமுறைகள் இங்கு கட்டாயப்படுத்தப்பட்டதால், இபாஸ் கிடைக்காத பயணிகள், வால்பாறை உள்ளிட்ட மாற்று இடங்களை நோக்கி செல்லத் தொடங்கி விட்டனர். இதையொட்டி, வால்பாறையில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சமீபத்திய மாதங்களாக அதிகரித்து காணப்படுகின்றன.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து வால்பாறை செல்வதற்கும் இபாஸ் நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி, கோவை மாவட்டம் வால்பாறைக்கு வரும் நவம்பர் 1ம் தேதி முதல் இபாஸ் நடைமுறை அமல்படுத்தப்படுகிறது. எனவே, நவம்பர் 1ம் தேதியிலிருந்து வால்பாறைக்கு வரும் அனைத்து சுற்றுலாப் பயணிகள், தங்களது வாகனங் களுக்கு இபாஸ் பெற்று பயணம் செய்ய வேண்டும். வால்பாறைக்கு செல்ல இபாஸ் பெறுவதற்கு https://www.tnepass.tn.gov.in/home என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். மேலும், இபாஸ் பதிவு செய்யாமல் வால்பாறைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் வாகனங்களுக்கு எந்தவொரு சிரமமின்றி இபாஸ் பெற்றிடும் வகையில், கோவை மாவட்ட நிர்வாகம் சார்பில், ஆழியார் சோதனை சாவடியிலும், கேரளாவிலிருந்து கோவை மாவட்டத்திற்குள் வரும் சோலையார் அணை இடதுகரை (மழுக்குப்பாறை வழி) சோதனை சாவடியிலும் இபாஸ் பதிவு செய்து, இபாஸ் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், சுற்றுலாப் பயணிகள் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை எடுத்துச் செல்லவும், பயன்படுத்தவும் அனுமதி இல்லை. சுற்றுலா பயணிகள் இபாஸ் பெற்று வருவதை கண்காணிக்க வருவாய் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை மற்றும் வனத்துறை ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் இந்த இரண்டு சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். வால்பாறை தாலுகாவில் உள்ள முகவரிகளை கொண்ட அனைத்து வாகனங்களான (சொந்த பயன்பாட்டு வாகனங்கள்) இரண்டு சக்கரம், நான்கு சக்கரம் மற்றும் சுற்றுலா வாகனம் https://www.tnepass.tn.gov.in/home என்ற இணையதளத்திற்கு சென்று உள்ளூர் பாஸ் (localite pass) ஒரு முறை மட்டும் பதிவு செய்து கொண்டால் போதுமானதாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வலிமையான தலைவர் பிரதமர் நரேந்திர மோடி: தென்கொரியாவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பாராட்டு

சியோல், அக்.31-

பிரதமர் மோடி வலிமையான தலைவர், அவரை எனக்கு பிடிக்கும். தாமதமாகி கொண்டிருக்கும் வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் கையெழுத்திடும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதில் நீண்ட தாமதம் ஏற்பட்டு வருகிறது. ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்கியதால், அமெரிக்கா 50 சதவீத வரி விதித்தது. அமெரிக்காவிடம் இருந்து சோளம் மற்றும் சோயாபீன்ஸ் ஆகியவற்றை இறக்குமதி செய்ய வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்திய விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்கமாட்டோம் என இந்திய அரசு கூறிவருகிறது. இதன் காரணமாக இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதில் தாமதமாகி வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பும் கடந்த வாரம் தொலைபேசியில் பேசினர். ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதியை குறைக்க இந்தியா ஒப்புக்கொண்ட பிறகு, இறக்குமதி வரியை 16 சதவீதமாக குறைக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தென்கொரியா சென்றுள்ளார். அங்கு ஆசியா பசிபிக் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்களிடம் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசியதாவது:



பிரதமர் மோடி மிகவும் சிறந்த நபர். அவர் வலிமையானவர். அவரை சம்மதிக்க வைப்பது சிரமம். ஆனால், நாங்கள் போராடுவோம் என்றார். இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவதில் நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது. இதில் இரு நாடுகளும் கையெழுத்திடும்.

போரை நிறுத்தினேன்: இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனும் நாங்கள் வர்த்தக பேச்சு வார்த்தை நடத்துகிறோம். இரு நாடுகளும் போரிட்டபோது, நான் பிரதமர் மோடியிடம், ''நீங்கள் சண்டையிட்டு கொண்டிருந்தால், உங்களுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய முடியாது என கூறினேன். பின்னர் பாகிஸ்தான் பிரதமரை அழைத்தும் இதையே கூறினேன். 250 சதவீதம் வரிவிதிப்பேன் என நான் அச்சுறுத்தியபிறகு 48 மணி நேரத்துக்குள் இரு நாடுகளும் சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டன. இந்த சண்டையில் 7 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. எனது தலையீடு காரணமாக கோடிக்கணக்கானோர் உயிர் தப்பினர். இவ்வாறு அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறினார்.

இந்தியா பாகிஸ்தான் போரை நிறுத்தினேன் என கடந்த மே மாதம் முதல் அதிபர் ட்ரம்ப் கூறிவருகிறார். ஆனால் இதில் அமெரிக்காவின் தலையீடு எதுவும் இல்லை என இந்தியா தொடர்ந்து கூறிவருகிறது. பாகிஸ்தான் ராணுவ அதிகாரி விடுத்த வேண்டுகோளை அடுத்து சண்டை நிறுத்தம் முடிவு எடுக்கப்பட்டதாக

இந்தியா கூறிவருகிறது.




## மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 1,429 சுகாதார ஆய்வாளர்கள் விரைவில் நியமனம்

சென்னை, அக்.31-

விரைவில் நியமிக்கப்பட உள்ள 1,429 சுகாதார ஆய்வாளர்கள் (கிரேடு2) பணிக்கு நவம்பர் 16ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு: தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியின் கீழ் வரும் சுகாதார ஆய்வாளர் (கிரேடு2) பதவியில் 1,429 காலி இடங்கள் நேரடி நியமன முறையில் நிரப்பப்பட உள்ளன. இதற்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த பதவிக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர் உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுடன் பிளஸ் 2 முடித்து, அதோடு தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரால் வழங்கப்பட்ட 2 ஆண்டு கால பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் சான்றிதழ் அல்லது சுகாதார ஆய்வாளர் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்திருக்க வேண்டியது அவசியம்.

பொதுப் பிரிவினர் உள்ளிட்ட அனைத்து வகுப்பினருக்கும் வயது வரம்பு கட்டுப்பாடு ஏதும் கிடையாது. கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம்.

கரோனா காலகட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு, பணிக்காலத்துக்கு ஏற்ப 2 முதல் 5 சிறப்பு மதிப்பெண் வழங்கப்படும். எனவே, தகுதி உள்ள ஆண்கள் www.mrb.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக நவம்பர் 16ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். போட்டித் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

## சுரண்டைக்கு திட்டங்கள் இல்லை பொதுமக்கள் அதிருப்தி அரசு மருத்துவமனை வேண்டும் என முதல்வரிடம் நேரடியாக பெண்கள் கோரிக்கை

சுரண்டை, அக்.31-

சுரண்டைக்கு முதலமைச்சர் எந்த திட்டங்களையும் அறிவிக்காதது, அப்பகுதி மக்களிடையே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது இந்நிலையில் அரசு மருத்துவமனை வேண்டும் என பெண்கள் முதல்வரிடம் நேரடியாக கோரிக்கை வைத்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.



தென்காசி மாவட்டத்தில் முடிவுற்ற பல்வேறு பணிகள் மற்றும் புதிய திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்க, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தென்காசிக்கு வருகை தந்தார். ஆலங்குளத்தில் இருந்து சுரண்டை வழியாக அவர் தென்காசி சென்றபோது சுரண்டையின் எல்லை முதல் கடைசி வரை பொதுமக்கள் ரோட்டின் இருபுறமும் கூடி நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனால் முதலமைச்சர் பல இடங்களில் வாகனத்தை நிறுத்தியும் வாகனத்தில் இருந்து இறங்கியும் வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

இதில் சிவகுரு நாதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி முன்பு மாணவ, மாணவிகள் முதல்வரை காண காத்திருந்தனர். மாணவர்களை கண்ட முதல்வர் வாகனத்தை விட்டு இறங்கி வந்து பள்ளி மாணவிகளிடம் கலந்துரையாடினார். மேலும் நன்றாக படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என அறிவுறுத்தி வாழ்த்தினார்.

அப்போது அங்கே வந்த சுரண்டை பகுதியைச் சேர்ந்த பெண்கள் தங்கரதி, பிரேமா ராணி, அழகு சுந்தரி, பேபி, பாப்பா, சின்னத்தாய் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தமிழக முதல்வரிடம் சுரண்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே உள்ளது. போதிய மருத்துவர் இல்லை. நாங்கள் மருத்துவ சிகிச்சைக்காக தென்காசி செல்ல வேண்டி உள்ளது. எனவே சுரண்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கை வசதியுடன் மருத்துவமனையாக தரம் உயர்த்தி தர வேண்டுமென நேரடியாகவே கோரிக்கை வைத்தனர். கண்டிப்பாக நிறைவேற்றி தருவதாக அந்தப் பெண்களிடம் முதல்வர் உறுதி அளித்தார். அருகில் மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் உள்ளார். இந்நிலையில் சுரண்டை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சுரண்டையில் அரசு பஸ் டெப்போ, சுரண்டையில் அரசு மருத்துவமனை, இரட்டைகுளம் ஊத்துமலை கால்வாய் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை அறிவிப்பார் என மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆகவே சுரண்டை மற்றும் சுற்று வட்டார பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்

## வட மாவட்டங்களில் தேங்கிக் கிடக்கும் நெல்; உடனடி கொள்முதலுக்கு நடவடிக்கை தேவை: அன்புமணி

சென்னை, அக்.31-

காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட் டங்களில் கடந்த 33 நாட்களாக கொட்டிக் கிடக்கும் நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''காவிரி பாசன மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்வதில் நடைபெற்று வரும் குளறுபடிகளால் அங்குள்ள விவசாயிகள் கண்ணீரில் மூழ்கியுள்ள நிலையில், காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடந்த 33 நாட்களாக நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்றும், அதனால் நெல் கொள்முதல் நிலையங்களின் முன் விவசாயிகள் இரவும், பகலும் காத்துக்கிடக்க வேண்டியிருப்பதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. விவசாயிகளுக்கு திமுக அரசு மீண்டும், மீண்டும் துரோகம் செய்து வருவது கண்டிக்கத்தக்கது.

காவிரி பாசன மாவட்டங்களைப் போலவே காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும் நடப்பாண்டில் நெல் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், அதை கொள்முதல் செய்வதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

செப்டம்பர் மாதத் தொடக்கத்திலேயே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டாலும் கூட, வடகிழக்கு பருவமழை உள்ளிட்ட காரணங்களைக் கூறி காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நெல் கொள்முதல் கடந்த 33 நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், அதனால் விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட டோக்கன்களுடன் இரவு பகலாக கொள்முதல் நிலையங்கள் முன் காத்திருப்பதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிறுத்தி வைக்கப்பட்ட நெல் கொள்முதல் எப்போது தொடங்கும் என்பது குறித்து அதிகாரிகளிடமிருந்து உறுதியான பதில் எதுவும் இல்லை. இன்று , நாளை என அதிகாரிகள் விவசாயிகளை அலைக்கழித்து வரும் நிலையில், இடையிடையே பெய்து வரும் மழையில் நனைந்த நெல் மூட்டைகள் முளைக்கத் தொடங்கியுள்ளன. ஆனாலும் ஆட்சியாளர்களின் மனம் இரங்கவில்லை; நெல் கொள்முதல் தொடங்கவில்லை.



33 நாட்களாக நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டிருப்பதும், எப்போது நெல் கொள்முதல் தொடங்கும் என்பதே தெரியாமல் விவசாயிகள் காத்துக்கிடப்பதும் சகித்துக்கொள்ள முடியாத கொடுமைகள் ஆகும். உலகின் மிக மோசமான அரசுகள் என்று விமர்சிக்கப்பட்ட நாடுகளின் நிர்வாகங்கள் கூட, உணவு படைக்கும் கடவுள்களான விவசாயிகளுக்கு இத்தகைய கொடுமைகளை இழைத்ததில்லை. ஆனால், நல்லாட்சிக்கான எந்த இலக்கணத்தையும் கொண்டிருக்காத திமுக அரசு, விவசாயிகளை கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

தென்காசியில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், நெல் கொள்முதல் சிறப்பாக நடைபெறுகிறது; கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டிருப்பதாகவும், நெல் கொள்முதல் குறித்து தினமும் தாம் ஆய்வு செய்வதாகவும் கூறியிருந்தார்.

தினமும் ஆய்வு செய்து வரும் முதல்வருக்கு வட மாவட்டங்களில் 33 நாட்களாக நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை என்பது எப்படித் தெரியாமல் போனது? ஒருவேளை இந்தப் பகுதிகள் தமிழகத்திற்கு அப்பால் இருப்பதாக முதலமைச்சர் நினைத்து விட்டாரோ?

அதிகாரத்தின் திமிரில் ஆட்டம் போடும் ஆட்சியாளர்கள் உணவு படைக்கும் கடவுள்களை மதிக்க மறுக்கின்றனர். அதனால் தான் தமிழ்நாட்டின் விவசாயிகள் கண்ணீரில் மிதக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளின் பிரச்சினையை அதிகாரத்தின் உச்சியில் இருந்து அலட்சியமாகப் பார்ப்பதை விடுத்து, விவசாயிகளில் ஒருவராக இருந்து பார்க்க வேண்டும். 33 நாட்களாக கொட்டிக் கிடக்கும் நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000